இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க,

# பகிரங்க ஒப்பந்தங்கள் சட்டம்

*[1987, சனவரி மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1987, சனவரி மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 2.10 தபாற் செலவு : ரூபா 1.15

**1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பகிரங்க ஒப்பந்தங்கள் சட்டம்**

*[1987, ஜனவரி மாதம் 30 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ. ஒ.—13/80

**பகிரங்க ஒப்பந்தங்களையும், பகிரங்க ஒப்பந்தங்களை முன்வைக்கின்ற அல்லது ஏதேனும் பகிரங்கக் குழுவுடன் பகிரங்க ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்ற ஆட்களையும் பதிவுசெய்வதற்கும்; விசாரணைக் குழாம் ஒன்றினை நியமிப்பதற்கும், பகிரங்க ஒப்பந்தங்கள் சம்பந்தமான கருமங்களைப் பற்றிப் புலனாய்வு செய்வதற்கென நியாய சபையொன்றினை அமைப்பதற்குமான உறுப்பினர்களைப் பெயர்குறித்து நியமிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பகிரங்க ஒப்பந்தங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். **சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.**

2. (1) இரண்டாம் உட்பிரிவிற்கமைய இச்சட்டத்தின் ஏற்பாடுகள், பகிரங்க ஒப்பந்தம் ஒவ்வொன்றிற்கும், அவ்வொப்பந்தத்தின் செலவு ஐம்பது இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து ஏற்புடையனவாதல் வேண்டும். **பகிரங்க ஒப்பந்தங்களுக்குச் சட்டம் ஏற்புடையதாதல்.**

இந்த உட்பிரிவில் "ஒப்பந்தத்தின் செலவு" என்பது, அத்தகைய ஒப்பந்தத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்ப்பயன் எனவும், கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மூலம் அத்தகைய ஒப்பந்தம் முடிவாக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஒப்பந்தத்திற்கான உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எதிர்ப்பயன் எனவும் பொருள்படும் என்பதுடன், அதற்கிணங்க, ஒப்பந்தம் தவணை அடிப்படையில் புரியப்படுவதற்காகவிருக்குமிடத்து, எதிர்ப்பயனானது, அத்தகைய தவணைகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான தொகைகளின் கூட்டுமொத்தமாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள்—

(அ) தேசியப் பொருளாதாரத்தின் நலனுக்காக, சனாதிபதி, பொதுவான அல்லது சிறப்பான கட்டளைமூலம் விலக்களிக்கக்கூடியதான ஏதேனும் பகிரங்க ஒப்பந்தத்திற்கு அல்லது பகிரங்க ஒப்பந்தங்களின் ஏதேனும் வகுப்பிற்கு ;

(ஆ) ஏதேனும் பகிரங்கக் குழுவால் பகிரங்க ஏலத்தின் மூலம் செய்யப்படும் விற்பனையொன்றிற்கு

ஏற்புடையனவாதல் ஆகாது.

## பாகம் I

### விசாரணைக் குழாத்தின் நியமனமும் நியாயசபை உறுப்பினர்களைப் பெயர்குறித்து நியமித்தலும்

குழாத்தின் நியமனமும் நியாயசபையைப் பெயர் குறித்து நியமித்தலும்.

3. (1) சனாதிபதியானவர், கைத்தொழில், வர்த்தக, சட்ட அல்லது நிதிசார் கருமங்களில் அத்துடன் நிருவாகக் கருமங்களில் அனுபவம் பெற்றிருந்தவராகவும் அவற்றில் ஆற்றலை வெளிக்காட்டியிருந்தவராகவும் சனாதிபதிக்குத் தோன்றுகின்ற ஆட்களிடையேயிருந்து பத்துக்குக் குறையாதவரான ஆட்களைக்கொண்ட விசாரணைக் குழாம் ஒன்றினைக் காலத்துக்குக்காலம் நியமிக்கலாம்.

(2) இதற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள் குழாத்தின் உறுப்பினர்கள் தொடர்பாகப் பயனுடையனவாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் புலனாய்வை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, சனாதிபதியானவர், (இச்சட்டத்தில் "நியாய சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விசாரணை நியாயசபையொன்றினை அமைப்பதற்கெனக் குழாத்தின் உறுப்பினர் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(4) குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவருக்கு மேற்பட்டோர் நியாயசபைக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, சனாதிபதி அவர்களுள் ஒருவரை நியாயசபையின் தவிசாளராகப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(5) இப்பிரிவின்கீழ் நியாயசபையொன்று அமைக்கப்படுமிடத்து, 5 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பகிரங்க ஒப்பந்தங்கள் பதிவாளர், நியாயசபையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

நியாயசபையின் தத்துவங்களும் கடமைகளும்.

4. (1) நியாயசபையானது, இச்சட்டத்தால் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும், அத்துடன் குறிப்பாகப் பின்வருவனவற்றையும், கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைப் பிரயோகிக்கலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் தொடர்பிலான ஏதேனும் கருமத்தின்மீது சனாதிபதியால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய புலனாய்வு செய்தலும் சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்தலும் ;

(ஆ) எவரேனும் ஆளை நியாயசபைமுன் கட்டளையிட்டழைத்தலும், அத்துடன் எவரேனும் ஆளை (அ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் புலனாய்வு தொடர்பில் அவரது அறிவுக்கெட்டியவரையிலான ஏதேனும் தகவலை வெளியிடுமாறும் அல்லது அவரது உடைமையில் அல்லது அவரது கட்டுக்காப்பின்கீழ் உள்ள ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிக்குமாறு பணித்தலும் ;

(இ) எழுத்திலான அறிவித்தலின் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு, பிரதம நிறைவேற்று அலுவலரை அல்லது ஏதேனும் பகிரங்கக் குழுவுக்குப் பொறுப்பாயுள்ள ஆளை அல்லது ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் கம்பனிக்குப் பொறுப்பாயுள்ள ஆளை அவரது உடைமையில் அல்லது அவரது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற அல்லது இருக்கக்கூடிய ஏதேனும் ஆவணத்தை அல்லது ஏதேனும் ஆவணத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியைக் காண்பிக்குமாறு அல்லது கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துதல் ;

(ஈ) இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளுக்கும் அல்லது அவற்றுள் எதற்கும் இணங்கியொழுகுமாறு எவரேனுமாளைத் தேவைப்படுத்தும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்பை எழுத்தில் வழங்குதல் , அத்துடன்

(உ) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் புலனாய்வு நிறைவேற்றப்படுவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமான வேறு எல்லாக் காரியங்களையும் செய்தல்.

(2) வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் இப்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு ஒரு வேண்டுகோள், அழைப்பாணை அல்லது பணிப்புரை விடுவிக்கப்படுகின்றதோ அல்லது வழங்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆள் உடனடியாக அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அதற்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும் என்பதுடன், அவர், நியாயமான காரணமின்றி அவ்வாறு செய்யத்தவறினால், நியாயசபையின் அதிகாரத்துக்கெதிராக அவமதித்த தவறுக்கு அல்லது நியாயசபையின் அதிகாரத்தை மதிப்புக் குறைத்த தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்கென சனாதிபதி, (இதனகத்துப் பின்னர் "பதிவாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பகிரங்க ஒப்பந்தங்கள் பதிவாளர் என அறியப்படவேண்டிய ஆளொருவரையும் அவசியம் எனக் கருதப்படக்கூடியவாறான உதவிப் பதிவாளர்களாக அத்தகைய வேறு ஆட்களையும் நியமித்தல் வேண்டும். பதிவாளரின் நியமனம்.

(2) உதவிப் பதிவாளரொருவராக நியமிக்கப்படும் ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் பதிவாளருக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

6. (1) பதிவாளரின் கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும் :— பதிவாளரின் கடமைகள்.

(அ) (i) கேள்விதாரர் ஒவ்வொருவரையும் அல்லது அத்தகைய கேள்விதாரருக்காகவும் அவர் சார்பிலும் ஒரு முகவராக, துணை முகவராக, பிரதிநிதியாக அல்லது நியமத்தராகச் செயலாற்றும் ஒவ்வோர் ஆளையும் ;

(ii) பகிரங்க ஒப்பந்தம் ஒவ்வொன்றையும், பதிவு செய்தல். அத்துடன்

(ஆ) முறைப்படி சத்தியஞ் செய்யப்பட்ட சத்தியக்கடதாசியொன்றுடன் சேர்த்து இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய விபரங்களைக் கொடுத்துதவுமாறு (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துதல் ;

(இ) பந்தி (ஆ) என்பதன் கீழ் கொடுத்துதவப்பட்ட விபரங்களை உள்ளடக்கவேண்டிய ஓர் இடாப்பை அல்லது பல இடாப்புகளைப் பேணுதல் ;

(ஈ) பந்தி (அ) என்பதன் (i) ஆம் உட்பந்தியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளை—

(i) இச்சட்டத்தையும் அதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் தகுந்தவாறு வலுவுக்கிடுவதற்கும் நிருவகிப்பதற்கும் அவசியமானவையெனப் பதிவாளர் கருதுகின்றவாறான அத்தகைய புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுமாறும் ; அத்துடன்

(ii) அவரது நிதி நிலைமை தொடர்பிலும், அத்துடன் உத்தேசிக்கப்பட்ட பகிரங்க ஒப்பந்தத்தின் தன்மை தொடர்பிலும் பதிவாளர் அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலும் விவரத்திரட்டுக்களைப் பதிவாளரிடம் கோப்பிடுமாறும் தேவைப்படுத்துதல்.

(2) பதிவாளர் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் அவரால் பேணப்படும் இடாப்புகளுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாத் திருத்தங்களையும் சேர்ப்புக்களையும் அல்லது மாற்றங்களையும் காலத்துக்குக்காலம் செய்தல் வேண்டும்.

இடாப்பு சான்றுபிருத்தல்.

7. பதிவாளரால் பேணப்படும் இடாப்பில் பதியப்படும் விபரங்கள், அதன்கண் உட்புகுத்தப்படுவதற்கென இச்சட்டத்தால் பணிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவையேனும் கருமங்களுக்கு முதற்றோற்றச் சான்றுதல் வேண்டும்.

## பாகம் II—பதிவு செய்தல்

பதிவாளரிடம் பதிவு செய்யுமாறு தேவைப் படுத்தப்பட்ட ஆட்கள்.

8. (1) எவரேனும் கேள்விதாரருக்காக அல்லது அவர் சார்பில் ஒரு முகவராக அல்லது துணைமுகவராக, பிரதிநிதியாக அல்லது நியமித்தாராகச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள், 10 ஆம் பிரிவிற்கிணங்கத் தம்மையும் அத்தகைய பகிரங்க ஒப்பந்தத்தையும் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன், 6 ஆம் பிரிவின்கீழ் கொடுத்துதவவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைப் பதிவாளருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(2) எவரேனும் ஆள், கேள்விதாரரொருவரின் ஒரு முகவராக, துணை முகவராக, பிரதிநிதியாக அல்லது நியமத்தராக உள்ளவிடத்து, அவர் இப்பிரிவின் கீழ் தம்மையும் பகிரங்க ஒப்பந்தத்தையும் பதிவு செய்யு முன்னர், ஒரு முகவராக, துணைமுகவராக, பிரதிநிதியாக அல்லது நிய மத்தராகத் தாம் நியமிக்கப்பட்டமைபற்றிய சான்றிதழொன்றை முதலில் பதிவாளருக்குக் காண்பித்தல் வேண்டும்.

8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகை தவறொன்றாதல்.

9. (1) எட்டாம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற் றிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாக் குற்றப்பணம் ஒன்றிற்கும் அத்துடன் இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) எட்டாம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட ஆளெவரும்—

(அ) பதிவு செய்யும் நோக்கத்திற்காகவன்றி பதிவாளருடன் ; அல்லது

(ஆ) பகிரங்கக் குழுவொன்றின் அல்லது அத்தகைய குழுவின் தொழி நுட்பக் குழுவொன்றின், கேள்விச் சபையொன்றின் அல்லது மதிப்பீட்டுச் சபையொன்றின் எவரேனும் உறுப்பினருடன் அல்லது அதன் எவரேனும் அலுவலருடன் அல்லது ஊழியரு டன் அல்லது எவரேனும் அரச அலுவலருடன்

இச்சட்டத்தின்கீழ் செல்லுபடியுள்ளவொரு பதிவுச்சான்றிதழை முதலில் காண்பிக்காமல், பகிரங்க ஒப்பந்தமொன்று தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயல் தொடர்பு எதுவும் கொள்ளுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஆள் செயல் தொடர்பு எதனையும் கொண்டிருப்பின் அல்லது எவையேனும் செயல் தொடர்புகளைக் கொண் டிருக்க எத்தனிப்பாராயின், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண் டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

10. (1) எட்டாம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்படுவதற்கான விண் ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படு தல் வேண்டும் என்பதுடன், அதன்கண் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவை யும் ஆகும் என விண்ணப்பகாரரினால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை யொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) விண்ணப்பகாரர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் மீற வில்லையெனவும் அத்துடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விப ரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் ஆகும் எனவும் பதி வாளர் திருப்தியுறுவதன்மேல், அவர், விண்ணப்பகாரரையும் அத்தகைய விண்ணப்பம் தொடர்புறுத்தும் பகிரங்க ஒப்பந்தத்தையும் பதிவு செய் தல் வேண்டும்.

(3) ஆளெவரும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பதிவாளருக்குச் செலுத்தும்வரை பதிவுசெய்யப்படுதலோ 11 ஆம் பிரிவின் கீழ் அவருக்குச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதலோ ஆகாது.

பதிவுச் சான்றிதழ்.

11. (1) பதிவாளர், 10 ஆம் பிரிவின்கீழான பதிவொன்றைப் பின்பற்றி அத்தகைய விண்ணப்பகாரருக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) பதிவாளர், பதிவு செய்யப்படுவதற்கென விண்ணப்பிக்கின்ற அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள ஆளெவரையும் ஏதேனும் நேரத்தில் தமக்கு முன்னர் வருகைதருமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன், இச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் தகுந்தவாறு வலுவுக்கிடுவதற்கு அவசியமெனப் பதிவாளர் கருதுகின்ற ஏதேனும் தகவலை நிச்சயப்படுத்துவதற்கென வேறு எவரேனும் ஆளின் வருகையைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின் மீது அத்தகைய ஆளை விசாரணை செய்யலாம்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழொன்று, 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய சான்றிதழ் அளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு வலுவிலிருத்தல் வேண்டும் என்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது காலத்துக்காலம் ஓராண்டு காலத்திற்குப் புதுப்பிக்கப்படலாம்.

ஒப்பந்தக்காரர்களுடனும் முகவர்களுடனும் செயல்தொடர்பு கொள்வதிலிருந்து உறுப்பினர்களும் அலுவலர்களும் தடைசெய்யப்படுதல்.

12. பகிரங்கக் குழுவொன்றின் அல்லது அத்தகைய குழுவின் தொழில்நுட்பக் குழுவொன்றின், கேள்விப்பத்திரச் சபையொன்றின் அல்லது மதிப்பீட்டுச் சபையொன்றின், எவரேனும் உறுப்பினர் அல்லது அதன் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது எவரேனும் அரச அலுவலர் அல்லது பதிவாளர், பதிவுசெய்யும் நோக்கத்திற்காகவன்றியும், 8 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஆட்கள் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழொன்றை முதலில் காண்பித்தாலன்றியும். ஏதேனும் பகிரங்க ஒப்பந்தத்தில் எழுகின்ற அல்லது அதுதொடர்பிலான ஏதேனும் கருமம் தொடர்பாக, 8 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் ஆளுடன், செயல் தொடர்பு எதுவும் கொள்ளுதல் ஆகாது. இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

6 ஆம் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட விபரங்களிலான மாற்றங்கள்பற்றிய அறிவிப்பு.

13. ஆறும் பிரிவின்கீழ் பதிவாளருக்குக் கொடுத்துதவப்பட்ட விபரங்களில் ஏதேனும் மாற்றம் இருக்கும்போதெல்லாம் அத்தகைய மாற்றம் ஏற்பட்டத்திலிருந்து அறுபது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அத்தகைய மாற்றம் பற்றிப் பதிவாளருக்கு அறிவிப்பது, 10 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆளின் கடமையாதல் வேண்டும்.

14. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் பதிவானது— மோசடிக்காக அல்லது வேறு ஏதுக்களின் மீது பதிவை இல்லாதாக்குதல்.

(அ) மோசடிமூலம் அல்லது பிறபகர்வின்மூலம் பதிவு பெறப்பட்டுள்ள விடத்து ;

(ஆ) அத்தகைய ஆள், ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் தொடர்பாக அல்லது அத்தகைய ஒப்பந்தத்தின் எவையேனும் நியதிகளை அல்லது நிபந்தனைகளை நிறைவேற்றுவது தொடர்பாக ஏமாற்றுதலை அல்லது துர்ப்பழக்கத்தைப் புரிந்திருக்குமிடத்து ;

(இ) அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்குமிடத்து ;

(ஈ) அத்தகைய ஆள் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நியதி நிபந்தனைகளை மீறியுள்ளவிடத்து ; அல்லது

(உ) அத்தகைய ஆள் 13 ஆம் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட விபரங்களிலான ஏதேனும் மாற்றம்பற்றி அறிவிக்கத்தவறுமிடத்து,

பதிவாளரால் அவரது சொந்தப் பிரேரணையின்மீது இல்லாதாக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தம் செய்யப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பதிவானது பதிவாளரால் இல்லாதாக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள விடத்து, அந்த ஆள் அதன்மீது பதிவுசெய்யப்படாதொழிதல் வேண்டும் என்பதுடன், பதிவாளர், விடயத்திற்கேற்ப, அத்தகைய இல்லாதாக்கத்தை அல்லது இடைநிறுத்தத்தைப்பற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அறிவித்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் எவரேனும் ஆளின் பதிவை இல்லாதாக்குமுன்னர் அல்லது இடைநிறுத்தம் செய்யுமுன்னர், பதிவாளர்—

(அ) அத்தகைய ஆளுக்கு அவருக்கெதிரான முறைப்பாட்டைப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை இடாப்பில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்புதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) முறைப்பாட்டின் விடயம்பற்றி விசாரணையொன்று நடாத்துதல் வேண்டும் என்பதுடன், நேரில் அல்லது எழுத்தில் விளக்கமொன்றைக் கொடுப்பதற்கும் அத்துடன் சான்று அழைப்பதற்கும் அந்த ஆளுக்கு வாய்ப்பொன்றை அளித்தலும் வேண்டும்.

15. (1) பதினான்காம் பிரிவின்கீழான ஏதேனும் இல்லாதாக்கல் அல்லது இடைநிறுத்தம் தொடர்பில் பதிவாளரின் முடிவொன்றினால் இன்னலுறும் ஆளெவரும், அத்தகைய இல்லாதாக்கல் அல்லது இடைநிறுத்தம் பற்றி அவருக்குப் பதிவாளரால் அறிவிக்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம். பதிவாளரின் முடிவிற்கெதிரான மேன்முறையீடு.

(2) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் குறித்து அரசியலமைப்பின் 130 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மீளாய்வு என்றவகையில் செய்யப்படும் விண்ணப்பங்கள் குறித்து அந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீட்டிற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றமானது இப்பிரிவின்கீழ் அதற்கு மேன்முறையீடொன்று செய்யப்படுவதன்மேல், எந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ, அந்த முடிபை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம், திரிபுபடுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம் என்பதுடன் நீதிநலன் தேவைப்படுத்தக்கூடியவாறு வேறு ஏதேனும் கட்டளையையும் ஆக்கலாம்.

ஒப்பந்தமொன்று இல்லாதாக்கப்பட்டமை அல்லது இடைநிறுத்தப்பட்டமை எவ்வாறிருப்பினும், அதன்கீழான கடப்பாடுகளை நிறைவேற்றுதல்.

16. பகிரங்க ஒப்பந்தமொன்றிற்கான திறத்தவர்களுள் ஒருவரின் பதிவொன்று இல்லாதாக்கப்பட்டமை அல்லது இடைநிறுத்தப்பட்டமை எவ்வாறிருப்பினும், அத்தகைய ஒப்பந்தத்திற்கான மற்றைய திறத்தவர், எந்தத் திறத்தவரின் பதிவு இல்லாதாக்கப்பட்டதோ அந்தத் திறத்தவரை, நிலவும் ஒப்பந்தத்தின்கீழ் அவரது கடப்பாடுகளை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன், இச்சட்டத்தின ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆள், அந்த ஒப்பந்தத்தின்கீழ் அவரது கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கு, உரித்துடையவராதலும் வேண்டும்.

## பாகம்—III

### பகிரங்க ஒப்பந்தங்களை அளிப்பதற்கான அல்லது கேள்விப்பத்திரங்களை வழங்குவதற்கான ஊக்குவிப்புகள் அல்லது அவாநிறைவுகள் முதலியன

கேள்விப் பத்திரங்களையும் பகிரங்க ஒப்பந்தங்களையும் வழங்குவதில் நன்மைகளைப் பெறுவதற்காக ஆளெவருக்கும் அளிக்கப்பட்ட அல்லது கொடை முனையப்பட்ட ஊக்குவிப்புகளும் அவாநிறைவுகளும் பிறழ்பகர்வுகளும்.

17. (1) ஒரு பகிரங்க ஒப்பந்தம் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கலின்போது அல்லது அத்தகைய ஒப்பந்தம் நிலவுகின்ற ஏதேனும் சட்டத்தில் பதிவாளருக்கு அல்லது ஏதேனும் குழாத்தின் அல்லது நியாயசபையின், பகிரங்கக் குழுவின் அல்லது அத்தகைய குழுவின் தொழினுட்பக் குழுவொன்றின், கேள்விப்பத்திரச்சபையின் அல்லது மதிப்பீட்டுச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அதன் எவரேனும் ஊழியருக்கு அல்லது அலுவலருக்கு அல்லது எவரேனும் அரச அலுவலருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பகிரங்க ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுமாறு அல்லது ஏதேனும் கேள்விப்பத்திரத்தை வழங்குமாறு அல்லது ஏதேனும் பகிரங்க ஒப்பந்தத்திற்காக அல்லது அது சம்பந்தமாக ஏதேனும் ஆதரவை அல்லது சிறப்புரிமையைக் காட்டுமாறு அல்லது கொடுக்குமாறு பதிவாளரை அல்லது அத்தகைய எவரேனும் உறுப்பினரை, ஊழியரை, அலுவலரை அல்லது அரச அலுவலரைச் செய்விக்கும் அல்லது ஊக்குவிக்கும் நோக்கத்திற்கென—

(அ) எவ்வகையினதுமான ஏதேனும் அவாநிறைவை கொடைமுனைகின்ற அல்லது கொடுக்கின்ற ;

(ஆ) கருத்தொன்றி ஏதேனும் பிறழ்பகர்வை அளிக்கின்ற ;

(இ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை உரித்துமாற்றுகின்ற, கொடுக்கின்ற அல்லது கைமாற்றுகின்ற ;

(ஈ) இலங்கையிலாயினுஞ்சரி, வேறெங்காயினுஞ்சரி ஏதேனும் புலமைப் பரிசிலை, கைம்மாறை அல்லது வேறு ஏதேனும், வகையிலான நன்மை அல்லது எதிர்பயனைக் கொடைமுனைகின்ற அல்லது கொடுக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓரிலட்சம் ரூபாவுக்குக் குறையாதவொரு தண்டத்திற்கும் அத்துடன் இரண்டாண்டுகளுக்கு குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராக இருக்குமிடத்து, அத்தகைய ஆள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்படும் ஏதேனும் தண்டத்துடன் மேலதிகமாக அந்த உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தொகையொன்றுக்குச் சமமான மேலும் ஒரு தண்டத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) ஒரு பகிரங்க ஒப்பந்தம் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கலின்போது பதிவாளர் அல்லது குழாத்தின் அல்லது நியாயசபை ஒன்றின் எவரேனும் உறுப்பினர் அல்லது பகிரங்கக் குழு ஒன்றின் அல்லது அத்தகைய குழுவின் தொழினுட்பக் குழுவொன்றின், கேள்விப்பத்திரச் சபையின் அல்லது மதிப்பீட்டுச் சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அதன் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது எவரேனும் அரச அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆள் இலங்கையிலாயினுஞ்சரி வேறெங்காயினுஞ்சரி, (1) ஆம் உட்பிரிவுக்கு முரணாகக் கொடை முனையப்பட்ட, அளிக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட எவ்வகையினதுமான ஏதேனும் ஊக்குவிப்பை அல்லது அவாநிறைவை ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது பெற்றுள்ளவிடத்து அல்லது ஏதேனும் புலமைப்பரிசிலை, கைம்மாறை அல்லது வேறு ஏதேனும் வகையினதான நன்மையை அல்லது எதிர்பயனை ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது பெற்றுள்ளவிடத்து அத்தகைய பதிவாளர், உறுப்பினர், அலுவலர், ஊழியர், அரச அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாவுக்குக் குறையாத தண்டம் ஒன்றுக்கும் அத்துடன் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஓர் ஊக்குவிப்பு, அவாநிறைவு, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் அல்லது ஒரு புலமைப்பரிசில், கைம்மாறு அல்லது வேறு ஏதேனும் வகையினதான நன்மை அல்லது எதிர்பயன், ஒரு பகிரங்க ஒப்பந்தத்தின் வழங்கலில் முக்கியமானவொரு காரணியாகச் செயலாற்றியுள்ளது எனவும் அதன் விளைவாகப் பதிவாளர் அல்லது குழாத்தின் அல்லது நியாயசபையொன்றின், ஒரு பகிரங்கக் குழுவின் அல்லது குழுவின் ஒரு தொழிநுட்பக் குழுவின் கேள்விப்பத்திரச் சபையின் அல்லது மதிப்பீட்டுச் சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அதன் எவரேனும் ஊழியர்

அல்லது அலுவலர் அல்லது எவரேனும் அரச அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆள் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏதேனும் முக்கிய மான அனுகூலத்தை அல்லது நன்மையைப் பெற்றுர் எனவும் சான்று காட்டப்பட்டுள்ளவிடத்து, மாறுனை எண்பிப்பு இல்லாதபோது, ஓர் ஊக்குவிப்பு, அவாநிறைவு, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் அல்லது ஒரு புலமைப்பரிசிலின் வழங்குகை அல்லது வேறு ஏதேனும் வகையினதான நன்மை அல்லது எதிர்பயன் எந்த ஆளுக்கு அளிக்கப்பட்டதோ, அந்த ஆளை அத்தகைய பகிரங்க ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுமாறு ஊக்குவிக்கும் நோக்கத்துக்காகவே அது கொடை முனையப்பட்டது அல்லது அளிக்கப்பட்டது அல்லது கொடுக்கப்பட்டது என்றே ஊகிக்கப்படுதல் வேண்டும்.

பதிவாளருடன் அல்லது ஒரு குழாம் அல்லது நியாயசபை அல்லது பகிரங்கக்குழு முதலியவற்றின் உறுப்பினருடன் தலையிடுதல்.

18. (1) தமது கடமைநெறியின் போதல்லாமல் வேறுவகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தாமாகவோ அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ, இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வேறு எங்கேயாயினுஞ்சரி, எத்தகையதுமான ஏதேனும் முறையில் இச்சட்டத் தின்கீழ் அல்லது ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் சம்பந்தமாக அல்லது அத்தகைய ஒப்பந்தக் காலத்தின்போது ஏதேனும் கட்டத்தில் பின்வரு வோர் தமது தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிக் கையிலும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும்—

(அ) பதிவாளரை அல்லது குழாத்தின் அல்லது ஒரு நியாயசபையின் எவரேனும் உறுப்பினரை;

(ஆ) ஒரு பகிரங்கக்குழுவின், அத்தகைய குழுவின் தொழில்நுட்பக் குழுவின், கேள்விப்பத்திரச்சபையின் அல்லது மதிப்பீட்டுச் சபையின் உறுப்பினர் ஒருவரை அல்லது அதன் எவரேனும் அலுவலரை அல்லது ஊழியரை;

(இ) எவரேனும் அரச அலுவலரை; அல்லது

(ஈ) வேறு எவரேனும் ஆளை, செல்வாக்கிற்குட்படுத்துகின்ற அல்லது செல்வாக்கிற்குட்படுத்த எத்தனிக்கின்ற ஒவ்வோராளும் தவ றொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற் றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாக் குற்றப்பண மொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனுமிடத்தில் புரி யப்படும் ஏதேனும் தவறு, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரால் தமது கைப்பட எழுதப்பட்ட பணிப்பொன்றினுல் பெயர்குறித்து நியமிக்கப் பட்ட நீதிநிருவாக வலயத்தில் நடைபெறும் மேல் நீதிமன்றத்தால் விளங் கப்படற்பாலதாதல் வேண்டும்.

அறிக்கை செய்வதற்கான கடமை.

19. (1) (அ) பதிவாளர் அல்லது ஒரு பகிரங்கக் குழுவின் அத்தகைய குழுவின் தொழில்நுட்பக் குழுவின் கேள்விப்பத்திர சபையின் அல்லது மதிப்பீட்டுச் சபையின் எவரேனும் அலுவலர்;

(ஆ) எவரேனும் அரச அலுவலர்; அல்லது

(இ) வேறு எவரேனும் ஆள்.

தமது தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும், நிறைவேற்றுகையிலும், இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுள் எதற்கும் முரணாக எவரேனும் ஆளினால் ஏதேனும் செயல் அல்லது எவையேனும் செயல்கள் புரியப்பட்டமையை அல்லது புரிய எத்தனிக்கப்பட்டமையைப் பற்றி உடனடியாகச் சனாதிபதிக்கு அறிவிப்பது அவரது கடமையாதல் வேண்டும்.

(2) சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றதன்மேல், 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ், புலனாய்வொன்றை நிறைவேற்றுவதற்கென நியாயசபையொன்றைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரும் அந்த உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுவதுமான ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாக் குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆளினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்று தொடர்பில், அத்தகைய ஆளுக்கெதிராகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இருத்தலாகாது.

(5) ஆளெவரும், சனாதிபதியின் எழுத்திலான அங்கீகாரத்துடனன்றி (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையின் உள்ளீடுகளுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறிப்பீடுசெய்யும் ஏதேனும் அறிக்கையை அல்லது கூற்றை அச்சிடுதலோ அல்லது வெளியிடுதலோ ஆகாது.

(6) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓரிலட்சம் ரூபாக் குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

**நியாயசபைக்கு மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி.**

20. (1) ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம், அது தொடர்பாகத் தேவைப்படுத்தப்பட்ட விபரக் கூற்றுகளுக்கு அல்லது முற்றகைமைகளுக்கு முரணாகச் செய்துகொள்ளப்பட்டுள்ளது எனச்சார்த்தப்படுமிடத்து அல்லது கேள்விப்பத்திரமொன்றின் வழங்குகைக்கு மட்டுப்பாடான அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான விவரக்கூற்றுகள் தரப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஒப்பந்தத்தின் வழங்குகையினால் இன்னலுறும் ஆளெவரும், முறைப்படி சத்தியஞ் செய்யப்பட்ட சத்தியக்கடதாசியொன்றுடன் சேர்த்தனுப்பப்படும் எழுத்திலான மனுவின் மூலம், அத்தகைய ஒப்பந்தம் பற்றிய புலனாய்வொன்றை நிறைவேற்றுவதற்கு 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியாயசபையொன்றை நியமிக்குமாறு சனாதிபதியை வேண்டலாம்.

(2) ஆறும் பிரிவினதும் இப்பிரிவினதும் நோக்கத்திற்கான "முறைப்படி சத்தியஞ்செய்யப்பட்ட சத்தியக்கடதாசி" என்பது, வாக்குமூலமளிக்கப்படுபவரின் சொந்த அறிவிற்குள்ளான நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் தருகின்றதும், ஒரு சமாதான நீதிவானின் அல்லது ஒரு நீதி நிருவாக அலுவலரின் முன்னர் சத்தியஞ்செய்யப்பட்டதுமான அல்லது உறுதிப்படுத்தப்பட்டதுமான ஒரு சத்தியக்கடதாசி என்று பொருள்படும்.

(3) சனாதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழான மனுவொன்றைப் பெற்ற தன்மீது புலனாய்வொன்றை நிறைவேற்றுவதற்கென 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியாய சபையொன்றைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

*நியாயசபை சனாதிபதிக்கு அறிக்கை செய்தல் வேண்டும் என்பது.*

21. நியாயசபையானது இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் புலனாய்வொன்று முடிவடைந்ததன்மீது உடனடியாக அதன் முடிவெடுப்புப் பற்றி சனாதிபதிக்கு அறிக்கையொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

*சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு நியாயசபை அறிக்கையை அனுப்புதல் வேண்டும் என்பது.*

22. (1) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றின்போது, ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாயிருந்துள்ளார் என நியாயசபைக்குத் தோன்றுமிடத்து நியாயசபையானது அதன் சொந்தப் பிரேரணையின்மீது இக்கருமம்பற்றிச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிக்கை செய்தல் வேண்டும் என்பதுடன், நியாயசபையின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவ வேண்டும் என்பதுடன் நியாயசபையின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற அத்தகைய ஏதேனும் கூற்றை, தகவலை அல்லது ஆவணங்களைப் பார்வையிடுவதற்கான வழியையும் அவற்றை சோதனை செய்து பிரதிகளை எடுப்பதற்கான வசதிகளையும் ஏற்பாடுசெய்து கொடுத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மீது இது குற்றவழக்கொன்று தொடுக்கப்பட வேண்டியதான ஒரு விடயம் என அவருக்குத் தோன்றினால் அவர் அத்தகைய அறிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒரு மாதத்திற்குள் அவ்வண்ணமே நியாயசபைக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அதன்பின்னர் இரண்டு மாதங்களுக்குள் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தலும் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க குற்றவழக்கு அல்லது வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தமாக அவருக்கு எல்லா உதவியும் அளிப்பது நியாய சபையின் கடமையாதல் வேண்டும் :

ஆயின், சட்டத்துறைத் தலைமையதிபதி, விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு இரண்டு மாதங்களுக்குள் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படமுடியாது என அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அவ்வண்ணமே நியாயசபைக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வழக்கு நடவடிக்கை இரண்டுமாத காலத்திற்குள் தொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் மட்டுமே அது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலும் ஆகாது.

(3) இப்பிரிவின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஓர் ஒப்பந்தக்காரராக, கேள்விதாரராக அல்லது வேறெவரேனும் ஆளாக இருக்குமிடத்து நீதிமன்றமானது அத்தகைய குற்றத்தீர்ப்புப் பற்றிப் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அதன்மேல் பதிவாளர்—

(அ) இடாப்பிலிருந்து அந்த ஆளின் பெயரை நீக்கிவிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கேள்விதாரரொருவராக அல்லது எத்தன்மைத்தானதுமான வேறேதேனும் தன்மையில் ஏழு ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு, பதிவாளருடன் பதிவு செய்துகொள்வதிலிருந்து அவரைத் தடைசெய்தலும் வேண்டும்.

வகைப்படுத்தப்பட்ட தகவலை வெளியிடும் ஆட்கள்.

23. (1) ஏதேனும் பகிரங்கக் குழுவினால் ஏதேனும் தன்மையில் எவரேனும் ஆள் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில், அவர் வகைப்படுத்தப்பட்ட தகவலெதனையும் கொள்வதற்கான அல்லது கவனத்திற் கொள்வதற்கான சந்தர்ப்பம் கொண்டிருந்து, அத்துடன் அவர் அத்தகைய தகவலை எந்த ஆளுக்கு வெளியிடுவதற்குக் கடமைப்பட்டுள்ளாரோ அந்த ஆள் தவிர்ந்த வேறெவரேனும் ஆளுக்குப் பகிரங்க ஒப்பந்தமொன்று தொடர்பாக ஏதேனும் கேள்விப்பத்திரம் வழங்கப்படு முன்பு அல்லது அதன்பின்னர் இலங்கையிலோ அல்லது வேறிடத்திலோ அறிவித்தால், அப்போது அத்தகைய ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாவிலான குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதகாலமொன்றிற்கான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "வகைப்படுத்தப்பட்ட தகவல்" என்பது பகிரங்க ஒப்பந்தம் எதனுடனும் தொடர்புள்ள நிகழ்வுகள், தகவல் அல்லது அறிவு, ஆவணங்கள் அல்லது குறிக்கோள்கள் என்று பொருள்படும்.

## பாகம் IV

## பொது

சாட்சிக்காரரை கட்டளையிட்டழைப்பதற்குள்ள தத்துவம்.

24. (1) நியாயசபையால் நடாத்தப்படும் ஏதேனும் புலனாய்வின் போது எல்லாச் சாட்சிக்காரரையும் கட்டளையிட்டழைத்துப் பரிசோதனை செய்வதற்கான தத்துவத்தை நியாசபை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வோர் அழைப்புக்கட்டளையும் நியாயசபைத் தவிசாளரின் கைப்படவிருத்தல் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளையொன்று, அதனகத்துப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளிடம் ஒப்படைக்கப்படுவதன்மூலம் அல்லது அது சாத்தியப்படாவிடின், அந்த ஆள் கடைசியாக இருந்ததாக அறியப்படும் இடத்தில் விட்டுவைக்கப்படுவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(3) எந்த ஆள்மீது அழைப்புக்கட்டளையொன்று சேர்ப்பிக்கப்பட்டதோ, அந்த ஆளொவ்வொருவரும் அதனகத்துக் கூறப்பட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் நியாயசபைமுன்பு சமுகமளித்தல் வேண்டு

மென்பதுடன் சான்றளித்தலும் அல்லது அழைப்புக்கட்டளையின் பகர்ப்பிற்கிணங்க அவரிடம் தேவைப்படுத்தப்பட்டவையும் அவரது உடைமையில் அல்லது தத்துவத்திலுள்ளவையுமான அத்தகைய ஆவணங்களை அல்லது பிறவற்றைக் காண்பித்தலும் வேண்டும்.

சான்று.

25. (1) இச்சட்டத்தின்கீழ், ஏதேனும் விசாரணை செய்யும் அல்லது புலனாய்வு செய்யும் நோக்கத்திற்காக நியாயசபை பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொடுத்தலும் பெறுதலும், அத்துடன் பெற்றுக்கொடுப்பதற்கு, பெறுவதற்கு அல்லது பரிசோதிப்பதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கது என அது எண்ணுகின்றவாறான அத்தகைய எல்லா ஆட்களையும் சாட்சிக்காரராகப் பரிசோதித்தலும் ;

(ஆ) சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது கொடுக்கப்பட வேண்டியதான சான்றை எவரேனும் சாட்சிக்காரரிடமிருந்து எழுத்திலாயினுஞ்சரி அல்லது வாய்மொழி மூலமாகவாயினுஞ்சரி தேவைப்படுத்துதல் ; அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரையானது சாட்சிக்காரர் நீதிமன்றத்தில் சான்றளித்தால், அந்தச் சாட்சிக்காரரிடமிருந்து தேவைப்படுத்தப்படக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய சாட்சிக்காரரொவ்வொருவருக்கும் ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவித்தல்.

(2) இச்சட்டத்தின்கீழான புலனாய்வு நெறியொன்றின்போது நியாயசபையால் பெறப்படக்கூடியவாறானதும் அவ்வாறு பெறப்பட்டிருக்கின்றதெனத் தவிசாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான அத்தகைய எல்லாச் சான்றும், அவை எழுத்திலிருப்பினுஞ்சரி அல்லது வாய்மொழி மூலமாகவிருப்பினுஞ்சரி, முரணான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சான்றுக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக. தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்கில் அல்லது இச்சட்டத்தின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், குற்றஞ் சாட்டப்பட்ட ஆளுக்கெதிரான சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

அழைப்புக் கட்டளைக்கு கீழ்ப்படிய அல்லது சான்று முதலியவற்றை அளிப்பதற்குத் தவறுதல்.

26. (1) இச்சட்டத்தின்கீழ் எந்த ஆளுக்கு அழைப்புக்கட்டளையொன்று சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த ஆளெவரும்—

(அ) நியாயசபையின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி அழைப்புக்கட்டளையிற் கூறப்பட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் நியாயசபை முன்னிலையில் தோற்றுவதற்குத் தவறினால் ; அல்லது

(ஆ) சத்தியஞ்செய்ய அல்லது உறுதியுரை மொழிய மறுத்தால் அல்லது முறையாகச் சத்தியம் செய்த பின் அல்லது உறுதியுரை மொழிந்த பின், நியாயசபையின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, நியாயசபையால் விசாரிக்கப்பட வேண்டும் அல்லது புலனாய்வு செய்யப்படவேண்டும் எனப்

பணிக்கப்பட்டனவான கருமங்கள் தொடர்பில் அவருக்கு விடுக்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு விடையளிக்க மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(இ) எந்த ஆவணம் அல்லது வேறு பொருள் அவருடைய உடைமையில் அல்லது தத்துவத்தில் இருப்பதுடன் நியாயசபையின் அபிப்பிராயத்தில் விசாரிக்கப்படவுள்ள கருமங்களின் உண்மையைக் கண்டறிவதற்கு அவசியமானதாகவுமிருக்கின்றதோ அந்த ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை நியாயசபையின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி நியாயசபைக்குக் காண்பிப்பதற்கு மறுத்தால் அல்லது தவறினால், அத்தகைய ஆள் நியாயசபைக்கு எதிராக அவமதிப்புத் தவறுக்கு அல்லது நியாயசபையை அவமரியாதை செய்த தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

அவமதிப்புத் தவறுக்கான தண்டனை.

27. (1) இருபத்தாறும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை, மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடர்பாகச் செய்யப்பட்டிருந்தால் அல்லது செய்யப்படாதிருந்தால், அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறொன்றாக அமையுமாயின் அல்லது அவ்வதிகாரத்தினை அவமரியாதைசெய்த தவறொன்றாக அத்தகைய செயல் அல்லது செய்யாமை, நியாயசபைக்கெதிராக அவமதிப்புத் தவறொன்றாக அமைதல் வேண்டும் அல்லது அந்நியாயசபையினை அவமரியாதைசெய்த தவறொன்றாக அமைதல்வேண்டும்.

(2) (அ) நியாயசபையானது ஆளொருவர் அதிகாரத்துக்கெதிராக அவமதிப்புத் தவறொன்றைப் புரிந்துள்ளாரென அல்லது அவ்வதிகாரத்தினை அவமரியாதை செய்தமை என்ற தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய தீர்மானத்தைக் குறிக்கும் சான்றிதழொன்றை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புமாறு நியாயசபையின் தவிசாளரை வேண்டுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் நியாயசபைத் தவிசாளரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு நீதிமுறைக் கவனத்திற்குட்படுத்தப் பொருத்தமானதென மேன்முறையீட்டு நீதிமன்றம் எண்ணக்கூடிய அவமதிப்புத் தவறொன்றுக்கான தண்டனைக்கான ஏதேனும் நடவடிக்கையில், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ், நீதிமன்றத்துக்குக் கையொப்பமிடப்பட்டு அனுப்பப்பட்ட சான்றிதழொன்றாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஆவணம்—

(i) சான்றாக ஏற்கப்படுதல் வேண்டுமென்பதுடன் முரணாக என எண்பிக்கப்பட்டாலன்றி மேலும் எண்பிப்பு இன்றி அத்தகைய சான்றிதழொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ii) சான்றிதழில் குறிப்பிடப்பட்ட தீர்மானமானது நியாயசபையினால் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் மேல் செய்யப்பட்டதென்பதற்குச் சான்றாதலும் வேண்டும்.

(இ) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எடுக்கப்பட்ட நியாய சபைக்கெதிரான சார்த்தப்பட்ட அவமதிப்புத் தவறு எதற்குமான அல்லது நியாயசபையினை அவமரியாதை செய்தமை எனச் சார்த்தப்பட்ட வேறு எதற்குமான தண்டனைக்கென இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையில், நியாயசபையின் உறுப்பினர் எவரும் தனது சொந்தச் சம்மதத்துடனன்றி சாட்சிக்காரரொருவராக கட்டளை விட்டழைக்கப்படுதலோ அல்லது பரிசோதிக்கப்படுதலோ ஆகாது என்பதுடன் அத்தகைய ஏதேனும் நடவடிக்கை, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சான்றிதழினைப் பெற்ற மூன்றுமாத காலத்துக்குள் கேட்டுத் தீர்க்கப்படுதலும் வேண்டும்.

**சாட்சிக்காரர்களின் சிறப்புரிமைகள்.**

28. நியாயசபைக்கு முன் சான்றளிக்கும் ஒவ்வோர் ஆளும், அத்தகைய சான்று தொடர்பாக, நீதிமன்றமொன்றின் முன் சான்றளிக்கும் சாட்சிக்காரரொருவர், அத்தகைய நீதிமன்றம் முன் அவர் அளிக்கும் சான்று தொடர்பாக எச் சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராயுள்ளாரோ அச்சிறப்புரிமைகள் யாவற்றிற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

**இரகசியம்.**

29. குழாத்தின் அல்லது ஒரு நியாயசபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அத்துடன் பதிவாளரும் அல்லது அத்தகைய நியாய சபையின் அல்லது பதிவாளரின் எவரேனும் பணியாட்டொகுதியினர், அவரது கடமைகளை ஏற்குமுன் அவரது கடமைகள் தொடர்பில் கண்டிப்பாக இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்குத் தம்மைப் பிணித்துக்கொள்ளும் வெளிப்படுத்துகையொன்றை ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம்—

(அ) நியாயசபையால், ஒரு நீதிமன்றத்தால் அல்லது கொடுக்கல்வாங்கல் அல்லது கருமம் எவ்வாள் தொடர்பானதோ, அவ்வாளினால் தெளிவுபடுத்துமாறு தேவைப்படுத்தப்படும்போது ;

(ஆ) அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்காகத் தவிர, ஏதேனும் கருமத்தை வெளிவிடுவதில்லையெனத் தம்மைப் பிணித்துக்கொள்ளுதல் வேண்டும்.

**துடர்ச்சி அல்லது குற்றவழக்கிற்கு எதிரான பாதுகாப்பு.**

30. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவாளரால், நியாயசபையின் உறுப்பினரொருவரால் அல்லது அதன் எவரேனும் அலுவலரால் அல்லது ஊழியரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, பதிவாளருக்கு, நியாயசபையின் உறுப்பினர்களுக்கு அல்லது அதன் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எதிராக, துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கெதிராக இச்சட்டத்தின்கீழ் அவரால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் வழக்கு, குற்றவழக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

31. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் முரணுகைத் தவறு புரிந்துள்ள ஆளெவரும் முரணாக வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், யூரர் சபையொன்றில்லாது தனியாக அமரும் மேல் நீதிமன்ற நீதிபதியொருவரின் முன்னிலையில் குற்றப்பகர்வு ஒன்றின்மேல், முதனிலை விசாரணையின்றி விளங்கப்படத் தக்கவராதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நீதிமன்றமானது, அத்தகைய நீதிமன்றத்தின் வேறேதேனும் வேலைக்கு முன்னர் அத்தகைய ஏதேனும் விளக்கத்திற்கு முன்னுரிமையளித்தலும் வேண்டும். இச்சட்டத்தின் கீழ் தவறுகள் புரியும் ஆட்கள் மேல் நீதிமன்றத்தின் நீதிபதியின் முன்னிலையில் விளங்கத் தக்கவர்களாதல்.

32. இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கான குற்றவழக்கெதுவும் சட்டத்துறை தலைமையதிபதியாலன்றித் தொடுக்கப்படுதலாகாது. சட்டத்துறைத் தலைமையதிபதி குற்றவழக்குத் தொடுத்தல்.

33. இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகப் பதிவஞ்சல் மூலம் தபாலில் அனுப்பப்படும் ஏதேனும் அறிவித்தல் அல்லது வேறு தொடர்பு முரணாக எண்பிக்கப்படும்வரை, அதனை அஞ்சலிலிட்ட மூன்று நாட்களுக்குள் முகவரியிடப்பட்டவரால் பெறப்பட்டிருக்கின்றதென ஊகிக்கப்படுதல் வேண்டும், என்பதுடன் பதிவாளரால் ஒப்பமிடப்பட்ட அத்தகைய அஞ்சல் பற்றிய சான்றிதழொன்று அது பற்றிய முதற்றோற்ற எண்பிப்பாதலும் வேண்டும். ஆவணங்களைச் சேர்ப்பித்தல்.

34. இச்சட்டத்தின்கீழான தவறொன்று— ஆட்கள் குழுக்கள் முதலியவற்றினலான தவறு.

(அ) ஆட்கள் குழுவொன்றினல் புரியப்படுமிடத்து, அப்போது—

(i) அக்குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், தவறுபுரியப்படும் நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளரொருவராக, செயலாளராக அல்லது அதனையொத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோராளும்; அல்லது

(ii) அக்குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இல்லாதிருப்பின் அத்தவறு புரியப்படும் நேரத்தில் அக்குழுவின் ஓர் உறுப்பினராக அல்லது ஒரு பங்காளராக, அல்லது அதன் பிரதான நிறைவேற்று அலுவலராக இருந்த ஒவ்வோர் ஆளும், அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆள் ஒருவருக்காக அல்லது அவர் சார்பில் செயலாற்றும் ஆளினல் புரியப்படுமிடத்து அப்போது பதிவுசெய்யப்பட்ட ஆள்,

அவரது சம்மதம் அல்லது உட்கையின்றி அத்தவறு புரியப்பட்டதெனவும் அத்துடன் அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்காக அவரது பணிகளின் தன்மையையும் ஏனைய எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்திற் கொண்டு அவர் பிரயோகித்திருக்கவேண்டியவாறன உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தாரெனவும் அவர் எண்பித்தாலன்றி அவர் அத்தவறு புரியப்பட்டதற்குப் பொறுப்பாளியாதல் வேண்டும்.

35. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று ஒப்பந்தமொன்றை எழுதி நிறைவேற்றுவதன்மூலம் ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் தொடர்பிலான இணக்கப் பேச்சுக்கள் முற்றுப்பெறுதிருக்குமிடத்து, அல்லது ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்து அத்தகைய ஒப்பந்தத்தின் நிறைவேற்றம் பூர்த்தியாக்கப்பட்டிராதவிடத்து, அல்லது ஏதே முற்றுப் பெறுத பகிரங்க ஒப்பந்தங்களுக்கு ஏற்புடைய சட்டம் முதலியன.

ளும் பகிரங்க ஒப்பந்தத்தின் நிறைவேற்றம் தொடர்பாக இறுதிக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிராதவிடத்து இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாகும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்குப்பின்னர், ஒரு பகிரங்க ஒப்பந்தத்திலுள்ள எல்லாக் கடப்பாடுகளினதும் நிறைவேற்றம் தொடர்பில் இறுதிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்குமிடத்தும் அத்துடன், அத்தகைய ஒப்பந்தத்தை வழங்குவதில் ஏதேனும் பகிரங்க குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைமுறையில் ஒழுங்கீனங்கள் உள்ளனவென அல்லது அத்தகைய ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளும் நிபந்தனைகளும் மீறப்பட்டுள்ளனவென நுண்ணாய்வின் பின்னர் நியாய சபை அபிப்பிராயப்படுமிடத்தும், நியாயசபை அது அவசியமானதெனக் கருதும் அத்தகைய விசாரணைகளைச் செய்யலாம் என்பதுடன், அத்தகைய விசாரணையின் முடிவைச் சனாதிபதிக்கும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும் அறிக்கைசெய்யவும் செய்யலாம் அத்துடன் 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய ஏதேனும் அறிக்கைக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

36. (1) சனாதிபதி, அல்லது விடயம் அல்லது பணி ஓர் அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்குமிடத்து, சனாதிபதியின் ஒருப்பாட்டுடன் செயல்படுகின்ற அத்தகைய அமைச்சர் இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, விடயம் அல்லது பணி, அமைச்சர் ஒருவருக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய அமைச்சர் சனாதிபதியின் ஒருப்பாட்டுடன் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எது தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) பதிவுசெய்வதற்கான படிவமும் முறையும் அத்துடன் அத்தகைய பதிவுதொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும் ;

(ஆ) பதிவை மீளப்புதுப்பித்தலுக்கான அல்லது மீளப்பதிவு செய்தலுக்கான படிவமும் முறையும் அத்துடன் அத்தகைய மீளப்புதுப்பித்தலுக்கு அல்லது மீளப் பதிவு செய்தலுக்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும் ;

(இ) சான்றிதழ்கள் எந்நிபந்தனைகளுக்கு அமைவாக வழங்கப்படுகின்றனவோ அந்நிபந்தனைகள் ;

(ஈ) பதிவுசெய்யப்பட்ட ஆட்களினால் வைத்திருக்கப்படும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது கணக்குகளைப் பார்வையிடுதல் ; அத்துடன்

(உ) சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்ற ஆட்களினால் வழங்கப்பட வேண்டிய அறிக்கைகள் அல்லது வேறு தகவல்.

(3) இச்சட்டத்தின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் வசதியானளவு விரைவில் அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டதெனக் கருதப்படுமோ, அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

37. நியாயசபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அத்துடன் பதிவாளரும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்கள் எனக் கருதப்படுதல் வேண்டும். நியாயசபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் அத்துடன் பதிவாளர்களும் பகிரங்க அலுவலர் எனக் கருதப்படுவர்.

38. (1) நியாயசபையின் தவிசாளர், நியாயசபை தீர்மானிக்கின்றவாறான அத்தகைய படிவத்திலும் விவரத்திலும் பூர்த்தியாக்கப்பட்ட ஆண்டுக்காலத்தின்போதான நியாயசபையின் வேலை பற்றிய அறிக்கையை சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். நியாயசபை சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

(2) நியாயசபை (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து மேலதிகமாக அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய கருமங்கள் மீதான அத்தகைய வேறு அறிக்கைகளையும் சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் நியாயசபையின் செயற்பாடுகளும் அலுவல்களும் தொடர்பில் காலத்திற்குக்காலம் சனாதிபதி கோரக்கூடிய அத்தகைய தகவலையும் சனாதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

39. நியாயசபையினது செயல் அல்லது முடிவு எதுவும் நீதிமன்றம் எதனிலும், எழுத்தாணை மூலமாக அல்லது வேறு வகையாக கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது. நியாயசபையினது செயல்களும் முடிபுகளும்.

40 சனாதிபதி வேறுவகையில் பணித்தாலன்றி, நியாயசபையின் முன்னரான எல்லா நடவடிக்கைகளும் மறைவில் நடாத்தப்படுதல் வேண்டும். நியாயசபையின் நடவடிக்கைகள்.

41. பதிவாளர், காலத்துக்காலம், சனாதிபதியினது எழுத்திலான முன்னங்கீகாரத்துடன், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளுக்கு, அத்தகைய ஆளானவர் இச்சட்டத்தின் கீழ் செய்ய வேண்டுமென அல்லது புரியவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில், எழுத்தில் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை வழங்கலாம். பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை வழங்குவதற்கு பதிவாளருக்குள்ள தத்துவங்கள்.

சத்தியம் அல்லது உறுதியுரை.

42. நியாயசபையின் தவிசாளர் தமது பதவிக்குரிய கடமைகளை ஏற்பதன்மேல் சனாதிபதிக்கு முன்னர் சத்தியஞ் செய்துகொள்ளுதல் அல்லது உறுதியுரை மொழிதல் வேண்டுமென்பதுடன், நியாயசபையின் மற்றைய உறுப்பினர்களும் பதிவாளரும், சனாதிபதியின் செயலாளருக்கு முன்னர் சத்தியஞ் செய்துகொள்ளுதலும் அல்லது உறுதியுரை மொழிதலும் வேண்டும். பதிவாளரின் அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும் பதிவாளருக்கு முன்னர் சத்தியஞ்செய்து கொள்ளுதல் அல்லது உறுதியுரை மொழிதல் வேண்டும்.

ஏற்பாட்டினை மீறுதல் தவறொன்றாதல் வேண்டுமென்பது.

43. இச்சட்டத்தின் ஏற்பாடுகளெதனையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளெதனையும் மீறுகின்ற ஒவ்வோர் ஆளும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

எத்தவறுக்கு தண்டமெதுவும் விதித்துரைக்கப்படவில்லையோ அத்தவறுக்கான தண்டம்.

44. இச்சட்டத்தின்கீழ் எத்தவறுக்குத் தண்டமெதுவும் விதித்துரைக்கப்படவில்லையோ அத்தவறுக்குக் குற்றவாளியாகும் ஒவ்வோர் ஆளும், ஓரிலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

பொருள் கோடல்.

45. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது—

(அ) அரசாங்கத் திணைக்களமொன்றின் விடயத்தில், அத்தகைய திணைக்களத்தின் தலைவர் என்றும் ;

(ஆ) பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றின் விடயத்தில் அதன் தவிசாளர் என்றும், அல்லது

(இ) உள்ளூர் அதிகாரசபையொன்றின் விடயத்தில், விடயத்திற்கேற்றூற்போன்று முதல்வர் அல்லது தவிசாளர் என்றும்,

பொருள்படும்.

"ஒப்பந்தம்" என்பது ஏதேனும் பகிரங்கக் குழுவினால் அல்லது அதன் சார்பில் கோரப்பட்ட, கேள்விப்பத்திரங்களைப் பின்பற்றிச் செய்துகொள்ளப்பட்டதாக முன்னப்பட்ட அல்லது செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்டிருக்கின்ற ஏதேனும் ஒப்பந்தம், உடன்படிக்கை, பொறுப்பேற்பு அல்லது கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கான ஒரு கோரிக்கை என்று பொருள்படும் ;

"ஒப்பந்த காலப்பகுதி" என்பது அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் சார்புடைய சொல்லமைப்புகளுடனுமான ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் தொடர்பில் எல்லா ஒப்பந்தத் திறத்தவர்களினதும், விவரக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடங்கிய நேரத்திலிருந்து எல்லாக் கட்டுப்பாடுகளையும் பூரணமாக்கி நிறைவேற்றும் வரையான காலம் என்று பொருள்படும் ;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகர சபை, பட்டினசபை அல்லது கிராமசபை எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப் பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங் களுக்கு, கடமைகளுக்கு அத்துடன் பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றை ஒத்த தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அத்துடன் நிறை வேற்றுவதவற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபை யையும் உள்ளடக்குகின்றது ;

"சமாதான அலுவலர்கள்" என்பது பொலிசுக் கடமைகளைப் புரிவதற் கென ஓர் அரசாங்க அதிபரினால் எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பொலிசு அலுவலர்களையும் கிராம சேவை அலுவலர்களையும் உள் ளடக்குகிறது.

"விதித்துரைக்கப்பட்ட" என்பது இச்சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட எனப் பொருள்படும் ;

"பகிரங்கக்குழு" என்பது அரசாங்கத்தினது, பகிரங்க கூட்டுத்தாப னத்தினது அல்லது உள்ளூர் அதிகாரசபையினது ஏதேனும் திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனம் எனப் பொருள்படும் என்பதுடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத் திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்புமுயற்சியை யும் உள்ளடக்கும் ;

"பகிரங்க ஒப்பந்தம்" என்பது பகிரங்கக்குழு எதற்கும் ஏதேனும் வேலையை அல்லது எவையேனும் சேவைகளைப் புரிவதற்கான தும் அல்லது எவையேனும் பண்டங்களை, பொருட்களை அல்லது ஏதேனும் ஆதனத்தை வழங்குவதற்கு அல்லது விற்பனை செய் வதற்கானதும் அப்பகிரங்கக் குழுவினால் அல்லது அதன்சார் பில் கோரப்பட்ட கேள்விப்பத்திரங்களைப் பின்பற்றிச் செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்டிருக்கின்ற ஒப் பந்தம் எனப் பொருள்படும் என்பதுடன், அப்பகிரங்கக் குழு வின் உடைமையில், தத்துவத்தில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற பண்டங்கள், பொருட்கள் அல்லது ஆதனம் எவற் றையும் அப்பகிரங்கக் குழுவானது விற்பனை செய்வதற்கான அல்லது கையுதிர்ப்பதற்கான ஒப்பந்தம் எதனையும் உள்ளடக் கும் ;

"பகிரங்கக்கூட்டுத்தாபனம்" என்பது கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவ

தும், மானியக்கொடை என்றவகையில், கடன் என்றவகையிற் அல்லது வேறு வகையாக அரசாங்கத்தினால் முழுக்கமுழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்டதான மூலதனத்தை அல்லது நிதியை உடைய ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை, அல்லது வேறு குழு எனப் பொருள்படும் ;

" பதிவாளர் " என்பது, உதவிப்பதிவாளர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

" மட்டுப்படுத்தும் விவரக்குறிப்புக்கள் " என்பது, பகிரங்க ஒப்பந்த மொன்று வழங்கும்போது குறிப்பிட்ட ஒரு கேள்விப் பத்திர காரன் நலன் அடையும்பொருட்டு வேண்டுமென்றே வரையப் பட்ட கேள்விப்பத்திரமொன்றின் விடயப்பொருள் ஒன்று தொடர்பில் வரையப்பட்ட ஏதேனும் விவரக் குறிப்பெனப் பொருள்படும் ;

" அரச அலுவலர் " என்பது, நீதித்துறை அலுவலர் ஒருவர் அல்லாத இலங்கைக் குடியரசின் கீழ் கொடுப்பனவு பெறும் ஏதேனும் பதவிவகிக்கும் ஆளொருவர் எனப் பொருள்படும் என்பதுடன் பின்வருபவர்களை அது உள்ளடக்காது :—

(அ) சனாதிபதி ;

(ஆ) சபாநாயகர் ;

(இ) நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ஈ) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

" தொழினுட்பக்குழு " என்பது ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் தொடர்பி லான விவரக்குறிப்புக்களை தயாரிக்கும் பொறுப்பொப்படைக் கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு எனப் பொருள் படும் ;

" கேள்விப்பத்திரகாரர் " என்பது பின்வருமாறு பொருள்படும் :—

(அ) எந்த ஆட்கள் கூட்டமைப்பில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எவரும் இலங்கைப் பிரசையொருவராக அல் லது சாதாரனமாக இலங்கையில் வதிபவராக இல்லாமல் இருக்கின்றாரோ, அந்த ஏதேனும் ஆட்களின் கூட் டமைப்பு ; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது அதன் பிரதான தொழில் இடத் தைக் கொண்டுள்ள கம்பெனி ஒன்று அல்லது குழுமம் ஒன்று ; அல்லது

(இ) இலங்கையில் சாதாரணமாக வதிகின்ற எவரேனும் தனியாள் அல்லது அப்படி வதியாதிருக்கின்றவிடத்து, இலங்கைப் பிரசையொருவராய் இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற ஆள்; அல்லது

(ஈ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது அதன் பிரதான தொழில் இடத்தை இலங்கையில் கொண்டுள்ள ஏதேனும் கம்பெனி, குழுமம் அல்லது பகிரங்கக் குழு; அல்லது

(உ) இலங்கையில் கூட்டிணைக்கப்படாததும் அதன் பிரதான தொழிலிடத்தை இலங்கையில் கொண்டில்லாததும், இலங்கையின் பிரசையொருவராக இருக்கின்றவரும் அல்லது இருந்திருக்கின்றவரும் அத்துடன் பகிரங்கத்தாபனம் எதனுடனும் ஏதேனும் பகிரங்க ஒப்பந்தம் செய்து கொள்பவரும் அல்லது பகிரங்கத் தாபனமொன்றுடனான அத்தகைய ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் உத்தேச கேள்விப்பத்திரகாரர் அல்லது ஒப்பந்தகாரர் அல்லது விநியோகத்தர் ஒருவராக இருக்கின்றவருமான எவரேனும் பணிப்பாளர், பங்காளர் அல்லது பங்குதாரர் எக்கம்பெனியின் பங்குகளில் இருபத்தைந்து சதவீதத்துக்கு அதிகமாகப் பங்கு வைத்திருக்கின்றாரோ,

அக்கம்பெனி அல்லது குழுமம் எதுவும்.

"கேள்விப்பத்திரம்" என்பது விலைகோரல், முனைப்பு, கூறுவிலை, பிரேரணை எதனையும் உள்ளடக்கும்.

## முதலாம் அட்டவணை

### குழாத்தின் உறுப்பினர்கள் தொடர்பிலான ஏற்பாடுகள்

1. ஆளொருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால், குழாத்திற்கு நியமிக்கப்படுவதற்கு அல்லது அதன் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

2. குழாத்தின் உறுப்பினர் ஒருவராக, ஆளொருவரை நியமிப்பதற்கு முன்னர், அத்தகைய ஆள் குழாத்தின் உறுப்பினர் ஒருவராகத் தம் பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமாக பாதிக்கும் சாத்தியம் கொண்ட நிதிசார் அக்கறை எதனையும் அல்லது வேறு அக்கறை எதனையும் கொண்டிருக்கவில்லை என சனாதிபதி தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளெவரும், சனாதிபதி வேண்டுகோள் விடுக்கும் போதெல்லாம், இச்சட்டத்தின்கீழ் தம் கடமைகளைப் புரிவதற்கு அவசியமானதென அவர் கருதுகின்ற அத்தகைய தகவலை சனாதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

3. செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பகிரங்க ஒப்பந்தமொன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ எவ்வழியி லும் அக்கறை கொண்டுள்ளவரான குழாத்தின் உறுப்பினரொருவர் சனாதிபதிக் குத் தம் அக்கறையின் தன்மையை வெளியிடுதல் வேண்டும்.

4. குழாத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும்—

(அ) ஆறும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய, அவ்வுறுப்பினர் எச் சாதனத்தின்மூலம் நியமிக்கப்பட்டாரோ, அச்சாதனத்தில் சனாதிபதி குறித்துரைக்கக்கூடியவாறான மூன்றாண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) மீள நியமிக்கப்படுவதற்கும் தகவுடையவராதல் வேண்டும்.

5. குழாத்தின் உறுப்பினர் எவரும் அதற்கான காரணம் எதுவும் காட்டப் படாமலேயே சனாதிபதியால் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

6. பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லாத குழாத்தின் உறுப்பினர் ஒருவர், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட அதற்கான கடிதம் மூலம் தாம் உறுப்பினர் ஒருவராக இருக்கும் குழாத்திலிருந்து பதவி விலகலாம்.

7. குழாத்தின் உறுப்பினர் ஒருவரது பதவியானது வெற்றிடமாக வரும் போது, சுகவீனம் காரணமாக அல்லது வேறு உடற்குறைபாடு காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாமல் இருக்குமிடத்து அத்தகைய உறுப்பினரின் இடத்துக்கு வேறு ஆளைச் சனாதிபதி நியமிக்கலாம்.

8. குழாத்தின் உறுப்பினர்களுக்கு சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதத்திலும் ஊதியமளிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந் தவர்களாதலும் வேண்டும்.

## இரண்டாம் அட்டவணை

இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் பதிவாளரினால் பேணப்படுகின்ற இடாப்பில் பதியப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விபரங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(அ) பகிரங்கக் கம்பெனி ஒன்றின் விடயத்தில் ஒவ்வொரு பணிப்பாளரின் பெயரும், முகவரியும் தேசிய இனமும் ;

(ஆ) தனியார் கம்பெனி ஒன்றின் விடயத்தில் ஒவ்வொரு பணிப்பாளரினதும் பங்குதாரரினதும் பெயரும், முகவரியும், தேசிய இனமும் ;

(இ) குழுமம் ஒன்றின் விடயத்தில், அதன் பங்காளர்களின் பெயரும், முகவரியும் தேசிய இனமும், அத்துடன் அத்தகைய குழுமத்தில் ஒவ்வொரு பங்காளரினதும் நிதி அக்கறையின் வீதங்கள் ;

(ஈ) தனியார் ஒருவரின் விடயத்தில், அத்தகையவரின் பெயரும், முகவரியும், தேசிய இனமும் ;

(உ) கேள்விப்பத்திரகாரர், ஒருவரின் சார்பில் முகவர் உப முகவர் பிரதிநிதி அல்லது நியமத்தர் ஒருவராகச் செயலாற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி, தேசிய இனம் ;

(ஊ) கேள்விப்பத்திரமொன்று வழங்கப்படுமிடத்து—

(i) கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரகாரரின் பெயர், முகவரி, தேசிய இனம் ;

(ii) அத்தகைய கேள்விப்பத்திரம் வழங்குவதற்குப் பெற்றுக்கொண்ட தொகை ;

(iii) கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரகாரர் ஒருவரின் சார்பில் முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது நியமித்தர் ஒருவராகச் செயலாற்றும் ஒவ்வோர் ஆளினதும் பெயர், முகவரி, தேசிய இனம் ;

(எ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதை நிச்சயப்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறான வேறு எவையேனும் விபரங்கள்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*